

திருப்பெரும்புதூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியம், பாகம் எண்–18, கண்ணந்தாங்கல் ஊராட்சியில் நடைபெற்ற "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பரப்புரை கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் கலந்துகொண்டு உரையாற்றினார். அருகில் ஒன்றியக்குழு தலைவர் எஸ்.டி.கருணாநிதி, திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ந.கோபால் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் முனைவர். அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேற்று (06.01.2025) சென்னை, புழல், பொப்பிலிராஜா அரசு மேல்நிலைப்பள்ளியில் மாற்றுத் திறனுடைய மாணவர்களுக்கான பல்வகைத் திறன் பூங்காவினை திறந்து வைத்து, மாற்றுத் திறனுள்ள மாணவர்களுக்கு தேவையான உபகரணங்களை வழங்கினார்கள். இந்நிகழ்வில் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாநில திட்ட இயக்குநர் மரு. மா. ஆர்த்தி, மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம், பள்ளிக் கல்வி இயக்குநர் முனைவர். ச. கண்ணப்பன், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி கூடுதல் மாநில திட்ட இயக்குநர் திருமதி. எஸ். உமா, இணை இயக்குநர் வை. குமார், சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் கபீர், மக்கள் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

### ஆலந்தூர் – கண்டோன்மெண்ட் நசரத்புரத்தில் உள்ள நியாயவிலைக் கடையில் பொங்கல் பரிசுத் தொகுப்பை தொடங்கி வைத்திட வருகை தரும்

# கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

### கழகத்தினர் திரண்டு வந்து பங்கேற்பீர்! அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், ஜன. 07-

ஆலந்தூர் தொகுதி, கண்டோன்மெண்ட் நசரத்புரத்தில் உள்ள ரேஷன் கடையில் கரும்பு, பச்சரிசி, சர்க்கரை, ரூ.3000/- ரொக்கம் ஆகிய உள்ளடங்கிய பொங்கல் பரிசு தொகுப்பை தொடங்கி வைத்திட நாளை 8-ஆம் தேதி வருகை தரும் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தினர் திரண்டு வந்து, கண்டோன்மெண்ட் - பட்ரோடு அண்ணா சிலை அருகில் நாளை காலை 9.00 மணியளவில் மாபெரும் வரவேற்பு அளித்திட வேண்டும் என்று மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

இந்த ஆண்டும் தமிழ்ர்களின் எழுச்சி திருவிழாவான பொங்கல் பண்டிகையை அனைவரும் உற்சாகமாக கொண்டாடும் வகையில் 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, 1 முழு கரும்பு ஆகிய பொருட்கள் உள்ளடங்



கிய பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரூ.3,000/- பொங்கல் பரிசும் சேர்த்து வழங்கப்படும் என்று நாம் நாளும் போற்றி வணங்கும் நம்முடைய உயிரினும் மேலான அன்புத் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் தளபதி அவர்கள் அறிவித்தார்.

அதன்படி, தமிழகத்தில் உள்ள 2 கோடியே 22 லட்சத்து 91 ஆயிரத்து 730 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு மற்றும் இந்த ஆண்டு ரூ.3,000/- ரொக்க பரிசு தொகையும் சேர்த்து மொத்தம் ரூ.6,936 கோடியே 17 லட்சத்து 46 ஆயிரம் செலவில் இந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இந்த பொங்கல் பரிசு தொகுப்பு மற்றும் ரெக்க பரிசு வழங்கும் திட்ட தொடக்க விழா நம்முடைய காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதியில் அடங்கிய கண்டோன்மென்ட்- நசரத்புரம் ரேஷன் கடையில் நடைபெறுகிறது.

இந்த மாபெரும் தொடக்க விழாவில் தமிழக முதல்அமைச்சர் நம்முடைய நெஞ்சம் நிறைந்த அன்புத் தலைவர் அவர்கள் கலந்து கொண்டு பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் திட்டத்தை தொடங்கி வைக்கிறார்.

அதன் பின்னர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நாளை 8-ஆம் தேதி காலை 10.30 மணிக்கு நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்த மைய அரங்கத்திற்கு சென்று எல்காட் நிறுவனம் ஏற்பாடு செய்துள்ள UMAGINE-TN தொடக்க விழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்கிறார்.

இவ்விழாக்களுக்கு வருகைத் தரும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் கண்டோன்மெண்ட் அண்ணா சிலை அருகில் நாளை 8-ஆம் தேதி காலை 9.00 மணியளவில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

இந்த விழாக்களில் பங்கேற்க வருகை தரும், நம்முடைய உயிரனைய தலைவர் தமிழ்நாடு முதல்வர் தலைவர் தளபதி அவர்களுக்கு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் கண்டோன்மெண்ட் பட்ரோடு, அண்ணா சாலை அருகில் மேளதாளம், பேண்டு வாத்தியம் முழங்க பிரம்மாண்ட மான வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வரவேற்பில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மாவட்ட - மாநகர - பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் - கழக நிர்வாகிகள் - தலைமை செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் உள்ளிட்ட அனைவரும் நாளை 8-ஆம் தேதி காலை 9.00 மணிக்கெல்லாம் பல்லாயிரக்கணக்கில் அணி திரண்டு வந்து பங்கேற்க வேண்டும் என்று மாவட்டத்தில் உள்ள கழகத்தினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

### சென்னை கிழக்கு மாவட்டத்தில் – பொங்கல் திருநாளையொட்டி

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் - 9,160 பேருக்கு பொங்கல் பொருட்கள், புத்தாடைகள் வழங்குகிறார்!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு நிகழ்ச்சி ஏற்பாடு!

சென்னை, ஜன.7-

சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் சட்டமன்ற தொகுதியில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர், சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு ஏற்பாட்டில் 08/01/2026 வியாழக்கிழமை மாலை 4.00 மணி அளவில், சென்னை, டவுட்டன், செயின்ட் பால்ஸ் பள்ளி வளாகத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்தில் உள்ள ஐந்து சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நாடாளுமன்ற/ சட்டமன்ற /மாநில / மாவட்ட / பகுதி / வட்ட கழக மற்றும் அனைத்து சார்பு அணிகளைச் சார்ந்த 3,550 கழக நிர்வாகிகளுக்கு பொங்கல் பொருட்கள், புத்தாடைகள் மற்றும் பரிசுகள்.

சென்னை, பாரிமுனை ராஜா அண்ணாமலை மன்றத்தில் துறைமுகம் சட்டமன்ற தொகுதியில் மறுகட்டுமான பணிக்காக குடிபெயர்ந்தோர் 1,110 குடும்பங்களுக்கு பொங்கல் பொருட்கள், புத்தாடைகள் மற்றும் பரிசுகள்,

சென்னை, பிராட்வே டான் பாஸ்கோ பள்ளி வளாகத்தில், அன்னை தயாளு அம்மாள் தொண்டு நிறுவனத்தில்



பயிற்சி பெற்ற / பயிற்சி பெறுகின்ற மாணவர்கள் 4,500 மாணவர்களுக்கு பொங்கல் பொருட்கள், புத்தாடைகள் மற்றும் பரிசுகளை,

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமை ஏற்று தன் பொற்கரங்களால் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

இந்த இனிய திராவிட பொங்கல் திருவிழாவில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், தயாநிதி மாறன் எம்.பி, டாக்டர்.கலாநிதி வீராசாமி எம்.பி, இரா.கிரிராஜன்.எம்.பி, ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ, ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ, இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, மாநில நிர்வாகிகள்: ப.ரங்கநாதன், கே.எஸ்.ரவிசந்திரன், தமிழன் பிரசன்னா, சங்கரிநாராயணன், எஸ்.மணிமுடி, பி.கே.மூர்த்தி எம்.சி, கே.சந்துரு, சி.மகேஷ்குமார், கே.எஸ்.எம்.நாதன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, பரிதிஇளம்சுருதி எம்.சி, வே.உமாகாந்த், புலவர் சாமிநாகப்பன், ஆர்.வரதன். மாவட்ட நிர்வாகிகள்: கோ.ஏகப்பன், தேவஜவஹர், ஜி.எம்.தேவன், இசட் ஆசாத் எம்.சி. மண்டலகுழுதலைவர் கூ.பீ.ஜெயின் எம்.சி, பா.ஸ்ரீராமுலு எம்.சி,சரிதா மகேஷ்குமார். எம் சி., டாக்டர். ஜி. சாந்தகுமாரி எம்.சி, பகுதி கழக செயலாளர்கள்: தொகுதி பார்வையாளர்கள் இரா விடுதலை, ஓ.ஏ.நாகலிங்கம், இரா. நரேந்திரன், என். கிருஷ்ணமூர்த்தி, சன். பி. முனியாண்டி டாக்டர். பி. எம். யாழினி, பகுதி செயலாளர்கள் வி.சுதாகர், சொ.வேலு எம்.சி, ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன் எம்.சி, வே.வாசு, டி.எஸ்.பி.இராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர்.நாகராஜ், எஸ்.முரளி, எஸ். இராஜசேகர். பொதுக்குழு உறுப்பினர்கள்: பி.ஜே. துளசிங்கம், டி.வி.செம்மொழி எம்.சி, சாவித்திரி வீரராகவன், ரமேஷ்(எ) நீலகண்டன் எம்.சி, எஸ். பன்னீர்செல்வம், கோ.மணி, எம்.இப்ராஹிம்கனி,பி.உதயசங்கர், அ.நிர்மலாதேவி, டாக்டர்.ஏ.பி.பூர்ணிமா, இரா. கலைச்செல்வி. மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள்: வானவில் விஜய், எஸ்.தனசேகர், ஜெ.பாலமுருகன், பா.ஜெகதீஷ், க.வினோத், ஜி.ஜெ.பிரபு, ஆர்.டி.சங்கர்நானா. ரஞ்சித் விஜயாலயன்,நா. துலுக்காணம், எம். பெரோஸ்கான், கா.ராஜ் முகமது, இரா.வீரமணி, எல்.பி.எப்.மோகன், துரை கண்ணன், சுதாதீனதயாயன் எம்.சி, ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி, ஜி.வி.நாகவள்ளி எம்.சி, ஜி.தாமோதரன், பி.விஜயகுமார், எம். விநாயகம், க.பா. பீரதீப்குமார், ஆர்.எ1.சித்திக், ம.அசோக்கமார், கு. கிருஷ்ணமூர்த்தி, எல்.சம்பத்குமார், து.ஆயிரம் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொள்கின்றனர்.

இத்திராவிட பொங்கல் திருவிழாவில் பங்கேற்க வருகை தரும் இளைஞர்களின் இதயம் கவர்ந்த இளம் தலைவர் துணை முதல்வர் அவர்களுக்கு ஆசர்கானா - ஜோதி திரையரங்கம் சந்திப்பில் இருந்து விழா திடல் வரை கத்திப்பாரா மேம்பாலத்தின் கீழே கழகத்தினர் ஆயிரக்கணக்கில் அணிவகுத்து நின்று உற்சாக வரவேற்பு அளிக்க உள்ளனர்.

இந்த வரவேற்பில் கழகத்தினர் அனைவரும் கழக கொடி, வரவேற்பு பதாகைகளை ஏந்தி நின்று எழுச்சியான முறையில் வரவேற்பு அளிக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆலந்தூரில் நடைபெறும் திராவிட சமத்துவ பொங்கல் விழாவில் மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத்தினர் அனைவரும் பெருந்திரளாக திரண்டு வந்து பங்கேற்று சிறப்பிக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

### ஆலந்தூரில் நடைபெறும் திராவிட பொங்கல் விழாவில் பங்கேற்க வருகை தரும்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு கழகத்தினர் அணிவகுத்து எழுச்சியான வரவேற்பு!

### காஞ்சி வடக்கு மாவட்ட கழகத்தினர் திரண்டு வந்து பங்கேற்பீர்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ. அன்பரசன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், ஜன. 07-

ஆலந்தூரில் நடைபெறும் திராவிட பொங்கல் விழாவில் பங்கேற்க வருகை தரும் மாண்புமிகு துணை முதல்வர் இளைய தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு ஆலந்தூர் ஆசர்கானா - ஜோதி திரையரங்கம் சந்திப்பில் இருந்து விழா திடல் வரை கழகத்தினர் அணிவகுத்து நின்று எழுச்சியான வரவேற்பு அளித்திடுவது என்று மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளர் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திராவிட பொங்கல் விழாவையொட்டி, இன்று ஜனவரி 7-ஆம் தேதி மாலை நடைபெறும் 3 பொங்கல் விழாக்களில் பங்கேற்கிறார்.

இன்று மாலை 4.00 மணியளவில் புனித தோமையர் மலை, மான்போர்ட் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி கூட்ட அரங்கில், ஆலந்தூர் தொகுதியில் உள்ள 1000 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை மற்றும் பொங்கல் பரிசு பொருட்களை துணை முதல்வர் அவர்கள் வழங்குகிறார்.

பிறகு அவர் குரோம்பேட்டைக்கு சென்று, குரோம்பேட்டை இரயில் நிலையம் அருகில் ரூ.32 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள குரோம்பேட்டை ராதாநகர் இரயில்வே சுரங்கப்பாதையை திறந்து வைக்கிறார்.

அடுத்து அவர் பல்லாவரம் சந்தை ரோட்டில் நடைபெறும் பொங்கல் விழாவில், பங்கேற்று பல்லாவரம் தொகுதியில் உள்ள 1000 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை மற்றும் பொங்கல் பரிசு பொருட்களை வழங்கினார்.

அதன் பின்னர் ஆலந்தூர் கத்திப்பாரா மேம்பாலம் பெரியார் சிலை அருகில் அமைந்துள்ள திடலில் மாவட்ட தி.மு.க. சார்பில் நடைபெறும் சமத்துவ பொங்கல் விழாவில் துணை முதல்வர் அவர்கள் பொது மக்களுடன் இணைந்து மகிழ்ச்சியுடன் கொண்டாட வருகை தருகிறார்.

### வில்லிவாக்கம் 95 வது வட்டக் கழகச் செயலாளர் மா.அகிலன் சகோதரர் –

# பாக முகவர் மா.பாலன் இல்ல விழா! அமைச்சர் பி.கே.சேகர்பாபு வாழ்த்துகிறார்!

### தயாநிதி மாறன் எம்.பி - அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ - ப.ரங்கநாதன் - கூ.பீ.ஜெயின் எம்.சி. பங்கேற்பு!

சென்னை, ஜன. 07 -

சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் மேற்குப் பகுதி, 95 வது வட்டக் கழகச் செயலாளர் மா.அகிலனின் சகோதரர் - 95 வது வட்டப் பாக முகவர் மா.பாலனின் இளைய மகள் அனலியா பாலனி முதல் பிறந்த நாள் விழா இன்று (7.1.2026 - புதன்கிழமை) மாலை 6.30 மணிக்கு மேல், சென்னை, ஐ.சி.எப்., ஏ.பி.ஜெ.அப்துல் கலாம் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

விழாவிற்கு 95 வது வட்டக் கழகச் செயலாளர் மா.அகிலன் தலைமை வகிக்கிறார்.

தே.தமிழ்வாணன், தா.டில்லி, சி.தில்லைவாணி, கோ.மதிவாணன், கே.இளங்கோவன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். ஜெ.கருணாமூர்த்தி (சுகி), க.விமலநாதன், எஸ்.விஸ்வநாதன், செ.திலீப்குமார், து.ஜெஸ்டின் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இவ்விழாவில் சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ. வெற்றிஅழகன், ப.ரங்கநாதன், பகுதிச் செயலாளர், மண்டலக் குழுத் தலைவர் கூ.பீ. ஜெயின், தொகுதி பார்வையாளர் ஓ.ஏ.நாக லிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு குழந்தையை வாழ்த்துகிறார்கள்.

இவ்விழாவில் கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் வே.வாசு, எல்.பி.எப்.ஆர். வரதன், சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன் எம்.சி, வானவில் விஜய், ஜி.ஜெ.பிரபு, வி.து.குபேந்திரன், ஏ.இ.முருகன், ஜெ.எஸ்.பிரபு, வி.து.இராமமூர்த்தி, பா.இளையா, ம.கலைச்செல்வி, ஐ.சி.எப்.மு.சுரேஷ் பாபு, பா.ஜானி, சிட்கோ சேகர், ஆர்.தீனதயாளன், க.சுகுமாரன், சொ.முருகேசன், ப.லோகு பாபு, கே.எஸ்.பாபு, கோ.மணிவேந்தன், க.மணிமாறன், பா.தே.தீனதயாளன், ஆர்.கோபாலகிருஷ்ணன், ம.சுந்தர் எபி, சிட்கோ ப.சுரேஷ் பாபு மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், பாக முகவர்கள் பலர் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.

மா.கடம்பன், மா.கதிரவன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில் கல்லூரி மாணவர்களின் திறன் வளர்ச்சி மற்றும் டிஜிட்டல் முன்னேற்றத்திற்காக முதல் கட்டமாக 10 இலட்சம் மடிக்கணினிகள் வழங்கும் 'உலகம் உங்கள் கையில்' திட்டத்தை தொடங்கி வைத்து, விழாப் பேருரை ஆற்றினார். இந்நிகழ்வினை திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி சுப்ரமணிய சுவாமி கலைக் கல்லூரியில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் காணொலி காட்சி வாயிலாக பார்வையிட்டு 821 மாணவர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கினார். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் திருத்தணி எஸ்.சந்திரன், வி.ஜி.ராஜேந்திரன், ஆ.கிருஷ்ணசாமி. சு.சுதர்சனம், டி.ஜெ. கோவிந்தராஜன், மாவட்ட ஆட்சித் தலைவர் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப், திட்ட இயக்குநர் வை.ஜெயகுமார், கே.எஸ்.யுவராஜ், மோகன் கல்லூரிகளின் தலைமை ஆசிரியர்கள், பேராசிரியர்கள் மற்றும் திரளான கல்லூரி மாணவர்கள் உள்ளனர்.




மேயர் நிதிநிலை அறிக்கை அறிவிப்பில் அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்களின் செயலாக்கம் குறித்த ஆய்வுக்கூட்டம் ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நேற்று (06.01.2026) மேயர் திருமதி ஆர்.பிரியா தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், இணை ஆணையாளர் (கல்வி) திருமதி க. கற்பகம், துணை ஆணையாளர்கள் வி.சிவகிருஷ்ணமூர்த்தி, (பணிகள்), ம.பிரதிவிராஜ், (வருவாய் (ம) நிதி) மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.